R4841

# "CHRIST IN YOU, THE HOPE OF GLORY"

# "கிறிஸ்துவானவர் உங்களுக்குள் இருப்பதே மகிமையின் நம்பிக்கை"

"ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய....... கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். " கொலோசெயர் 1:25-27

இந்த வாசகம் புதிய ஏற்பாட்டில் அநேக இடங்களில் சற்று மாறுபட்ட விதங்களில் காணப்படுகிறது. அர்ப்பணம் செய்து கொண்ட தேவனுடைய பிள்ளைகள் "கிறிஸ்து இயேசுவில்" என்று பேசப்படுகிறார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாகிய அவர்களுக்கு தேவன் அவரை தலையாக தந்தருளினார். நாம் "கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணபட்டிருக்கிறோம்." இதை ஆதி காலங்களுக்கு மறைவாயிருந்து இப்பொழுது நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று விளக்குகிறார். அதென்னவெனில் தேவன் உலகத்தாரை கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாக்கினார். (2கொரிந்தியர் 5:19; கொலோசெயர் 1:26)

அநேக அங்கங்கள் அடங்கியது தான் இந்த கிறிஸ்து. (1கொரி.12:12) கிறிஸ்து என்ற கிரேக்க வார்த்தை எபிரேயு பாஷையில் மேசியா என்று சொல்லப்படுகிறது. இரண்டு மொழிகளிலும் இந்த வார்த்தைக்கு "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள். ஆதி காலங்களில் இஸ்ரயேலின் ராஜாக்கள் அபிஷேகம் பண்ணப்பட்டது போல ஆசாரியர்களும் எண்ணெயினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். மெய்யான ராஜாக்களும் ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டதை இந்த சடங்கு அடையாளமாக காண்பிக்கிறது. ஆகையால் மேசியா என்பது அபிஷேகம் பண்ணப்பட்ட இராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருக்கிறார்கள். அவர்களை தேவன் உலக தோற்றத்திற்கு முன்னே தீர்மானித்திருக்கிறார். அதாவது அவரது ஏற்பாடுகளுக்கு கீழ்ப்படிந்த அனைவரையும் உயர்த்தவும் மற்றவர்களை தாழ்த்தவும் தீர்மானித்திருந்தார்.

மேசியாவை ஆயத்தபடுத்தும் காலம் இந்த சுவிசேஷ யுகமாகும். ஆகையால் முதன் முதலில் மேசியாவின் தலையானவர். பிறகு அவரைத் தொடர்ந்து அப்போஸ்தலர்களும் அதன்பிறகு யுகம் முழுவதும் மற்ற சரீர அங்கங்களும் இருக்கிறார்கள். "தெரிந்து கொள்ளப்பட்டவர்களின்" முழு எண்ணிக்கையும் காணப்பட்டு சோதிக்கப்படும் போது இந்த யுகம் முடிவுக்கு வரும். பிறகு சரீரமானது நிறைவடைந்திருக்கும். மேசியா நிறைவடையும் போது, கிறிஸ்துவும் முழுமையடைந்திருப்பார்.

தேவனுடைய திட்டத்தில் இந்த பகுதி சுபாவ மனிதர்களுக்கு மறைவாயிருக்கிறது. அவர்களால் அதைக் காண இயலாது. தேவனை கனம் பண்ணுகிறவர்களும் அவரது திட்டங்களுக்கு மிகவும் நெருங்கி இருக்கிறவர்கள் மட்டுமே அதைக் காணக்கூடும். அது யூதர்களுக்கும் மறைவாயிருந்தது. இயேசு இந்த மேசியாவின் சரீரத்துக்கு தலையானவர் என்பதையும், அது மானிட சரீரமல்ல ஆவியின் ஜீவி என்பதையும் அறியவில்லை. தேவன் யூதர்களிடமிருந்தும் சகல கோத்திரங்களிலுமிருந்தும் இந்த சரீரத்திற்கான அங்கங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்.

### "நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்"

இந்த பாடத்தைக் குறித்த பல்வேறு வேத வாக்கியங்களை கவனிக்கும் போது கிறிஸ்து நம்மில் எப்படி பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார் என்பதை நாம் காண்கிறோம். நாம் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிற அளவுக்குத்தக்கதாக நாம் அவரது சரீரத்தில் உண்மையுள்ள அங்கங்களாக இருந்து நம்மில் அபிஷேகத்தை பெற்றிருக்கிறோம். அப்போஸ்தலர் கூறுகிறதாவது; "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது." "நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சகலத்தையம் அறிந்திருக்கிறீர்கள்." (1 யோவான் 2:27, 20) இது நமக்கு வெளிப்படுத்துவது போல உலகிற்கு வெளிப்படுத்தவில்லை. சுயநலத்திற்கு எதிரான கிறிஸ்துவின் சிந்தையை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். நம்மைக் காட்டிலும் மற்றவர்களிடம் இன்னும் அதிகமதிகமாக புரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு நல்ல விதையும், நல்ல பழத்தை கொடுக்கும். அது போல நாம் திராட்சைச் செடியில் நிலைத்திருந்தால் அதன்மூலம் சாந்தம், பொறுமை, சகோதர அன்பு, நீடிய பொறுமை, அன்பு போன்ற கனிகளைத் தருவோம்.

கிறிஸ்துவானவர் உங்களுக்குள் இருப்பதே மகிமையின் நம்பிக்கை என்பது இந்த கிறிஸ்துவுக்கு, இந்த அபிஷேகம் பண்ணப்பட்டவருக்கு தேவன் கனம், மகிமை மற்றும் சாகாமையை, தெய்வீக சுபாவத்தை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அபிஷேகத்தை, கிறிஸ்துவின் ஆவியை உடையவர்கள் மட்டுமே இந்த நம்பிக்கையை சரியானபடி பெற்றிருக்க முடியும். ஏனெனில் நாம் பெற்றிருப்பது சுதந்திரத்தின் வெறும் அதிகாரம் மற்றும் வரப்போகிறதை ருசி பார்த்தலை மாத்திரமே ஆகும். ஆனால் இந்த அழைப்பு நமக்கு இப்பொது அவமானத்தைக் கொடுக்கும். அவர்கள் "பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் சொல்லுவார்கள்." அந்த அபிஷேகத்தைப் பெற்ற நம்மேல் சொல்லுவார்கள். "உலகம் அவரை அறியாதபடியினால் நம்மையும் அறியமாட்டார்கள்." (1 யோவான் 3:1) நாம் இப்பொழுது பெற்றிருக்கிற இது ஒரு கசப்பான முன்னனுபவம். ஆனால் இதனுடன் உலகம் தரக்கூடாத ஒரு சந்தோஷம் இணைந்திருக்கிறது.